# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்:..............................................................

நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு" என்ற பாடலைப் பாடியவர்.

அ) கணியன் பூங்குன்றனார் ஆ) நாமக்கல் கவிஞர்

இ) பாரதியார் ஈ) கனக சுப்புரத்தினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. அட்டாலும் ______________________ சுவையில் குன்றாது.

அ) நீர் ஆ) பழச்சாறு இ) பால் ஈ) தேநீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. அஃறிணைக்குரிய பால்கள்

அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. மாமன்னன் எல்லாளன் இலங்கையை ஆட்சி செய்த ஆண்டுகள்

அ) 24 ஆ) 14 இ) 34 ஈ) 44

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தமிழ்ச்செல்வம் ஆகமாட்டாயா? என்னும் பாடத்தில் தமிழ் இறைவனார் எனக் குறிப்பிடப்படுபவர்

அ) ஔவையார் ஆ) திருவள்ளுவர்

இ) பாவேந்தர் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. 'மூட ஆமை' என்ற கதையில் கொக்குகளும் ஆமையும் வாழ்ந்த இடம்

அ) குளம் ஆ) கிணறு

இ) கடல் ஈ) ஆறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. உழவர்கள் வயலை நோக்கிச் செல்கின்றார்கள். இச்சொல்லியத்தில் வந்துள்ள எழுவாய்

அ) வயலை ஆ) உழவர்கள்

இ) செல்கின்றார்கள் ஈ) நோக்கி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. மயிர்நீப்பின் உயிர் வாழா விலங்கு

அ) மான் ஆ) அகணமா இ) கவரிமா ஈ) கரடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. வறுமை காரணமாகக் குமண மன்னனை நாடிச் சென்ற புலவர்

அ) சீர்த்தலைச்சாத்தனார் ஆ) சத்திமுற்றப்புலவர்

இ) மோசிகீரனார் ஈ) பெருந்தலைச்சாத்தனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. 'நண்பர்கள்' என்பது

அ) ஆண்பால் ஆ) பலர்பால்

இ) பலவின்பால் ஈ) ஒன்றன்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. எல்லாள மன்னன் கட்டிய பெலிவாவியின் இன்றைய பெயர்

அ) வவுனிக் குளம் ஆ) கந்தளாய்க் குளம்

இ) இரணைமடுக் குளம் ஈ) பாவற் குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஐயிரண்டு திசைமுகத்தும் தன் புகழை வைத்தோன்

அ) பண்டாரவன்னியன் ஆ) இராவணன்

இ) இராசஇராசசோழன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. சொல்லியத்தில் கருத்து முடியும் இடம்

அ) எழுவாய் ஆ) அடைமொழி

இ) செயப்படுபொருள் ஈ) பயனிலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. எம்முயிர்ச் செல்வம் ஆக மாட்டாயா? என்று கவிஞர் கேட்பது

அ) வீட்டை ஆ) கல்வியை

இ) குழந்தையை ஈ) பணத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. **பழமொழி :-** இளமையிற் கல்வி ________________ எழுத்து.

அ) கலையில் ஆ) தலையில்

இ) சிலையில் ஈ) நிலையில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. நாம் அயலவரோடு நல்லுறவுடன் வாழப் பழக வேண்டும். இதில் வந்துள்ள நல்லுறவுடன் என்பது

அ) பொறாமையுடன் ஆ) முரண்பாட்டுடன்

இ) ஒத்துழைப்புடன் ஈ) எதிர்ப்புடன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பின்வருவனவற்றுள் வினைச்சொல்

அ) நடந்தான் ஆ) தாமரை

இ) பெட்டி ஈ) காகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற சொல்

அ) வெய்யோன் ஆ) கதிரவன்

இ) பரிதி ஈ) திங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. மயிலாடுமலையில் மரகதப் பச்சையாகத் தோற்றம் அளிப்பவை

அ) தென்னை மரங்கள் ஆ) தேயிலைச் செடிகள்

இ) வாழை மரங்கள் ஈ) நெற்பயிர்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ஒரு பொருளின் பகுதியைக் குறிக்கும் பெயர்

அ) சினைப்பெயர் ஆ) குணப்பெயர்

இ) பொருட்பெயர் ஈ) தொழிற்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நாட்டார் பாடல்கள்

அ) எளிமையானவை ஆ) கடினமானவை

இ) பொருள்விளங்காதவை ஈ) கற்றோருக்கு மட்டுமே உரியவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. ஏர் என்பது

அ) கத்தி ஆ) கலப்பை

இ) கோடரி ஈ) மண்வெட்டி

அ) ☐ ആ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பெயர்ச்சொல் உணர்த்துவது பொருளை. வினைச்சொல் உணர்த்துவது

அ) வேற்றுமையை ஆ) பண்பை

இ) செயலை ஈ) உருபை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. நீ, நீர், நீங்கள் என்பன

அ) முன்னிலை ஆ) தன்மை

இ) பன்மை ஈ) படர்க்கை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. நீங்கள் + ஐ என்பது

அ) நீங்களை ஆ) உங்களை

இ) எங்களை ஈ) நீரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. 'வானம்' என்ற சொல் குறிப்பது

அ) ஞாலத்தை ஆ) நிலவை

இ) விண்ணை ஈ) ஞாயிற்றை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தொழிற் பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஓடினாள் ஆ) ஓடின

இ) ஓடியது ஈ) ஓடுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. அழகின் குடியிருப்பாக விளங்கியது

அ) வன்னி ஆ) மட்டக்களப்பு

இ) சிலாபம் ஈ) மன்னார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. குணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) யாழ்ப்பாணம் ஆ) சிவப்பு

இ) இலை ஈ) கணினி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. அறுவடைப் பாடல் பாடப்படுவது

அ) வயலை உழும்போது ஆ) நெல் விதைக்கும்போது

இ) அரிவி வெட்டும்போது ஈ) நாற்று நடும்போது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழீழத்துக்கு வெளியே தமிழர்கள் வாழும் பகுதி மலையகம். இது இயற்கை அழகுகள் நிறைந்த இடமாகும். குளிர்ச்சியும் வெப்பமும் நிறைந்திருப்பதனால் மலையகம் குளிர்மையான தென்றல் வீசும் சோலைகளால் நிறைந்திருக்கும். வானுயர ஓங்கிய மலைகளின் மேல் முகில்கள் படிந்திருப்பது கண்ணுக்கு இனிய காட்சியாகும். இம்மலைகளிடையே அருவிகள் தவழ்ந்து வருவது தனியழகு. இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் மலையகத்தின் இயற்கை வளத்தைக் கண்டு மகிழ்ந்தனர். அங்கே காணப்பட்ட காலநிலைக்கேற்ப நுகர்வுப் பொருட்களான தேயிலை, கோப்பி, இறப்பர் போன்ற பெருந்தோட்டப் பயிர்களை விளைவித்தனர். இன்று இவை இலங்கைத் தீவின் வருமானத்தில் முதலிடம் பெறுகின்றன. இத்தேயிலைத் தோட்டத்தில் பெருமளவில் பணி புரிந்தவர்கள் தமிழர்களே. இத்தமிழர்களுடைய ஈடிணையற்ற உழைப்பினாலேயே மலையகம் சிறந்து விளங்குகின்றது.

1. தமிழீழத்துக்கு வெளியே தமிழர் வாழும் பகுதி எது?

____________________________________________

2. எதன் மேல் முகில்கள் படிந்திருக்கின்றன?

____________________________________________

3. எவை மலைகளிடையே தவழ்ந்து வருகின்றன?

____________________________________________

4. பெருந்தோட்டப் பயிர்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

____________________________________________

____________________________________________

5. யாருடைய உழைப்பினால் மலையகம் சிறந்து விளங்குகின்றது?

____________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. நாகரிகம் என்ற சொல் குறித்து நிற்பது எதை?

2. ஆ (பசு) தரும் பயன்கள் இரண்டைத் தருக.

3. மயிலாடு மலையை ஊரவர்கள் எப்பெயர் கொண்டு அழைப்பர்?

4. துட்டகெமுனுவும் பௌத்த குருமாரும் போருக்கான முழக்கமாக எதை முன் வைத்தனர்?

5. 'தமிழ்ச்செல்வம் ஆக மாட்டாயா' என்ற பாடலை எழுதிய கவிஞர் யார்?

6. 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்ற பழமொழி விளக்குவது எதை?

7. கொக்குகளும் ஆமையும் ஏன் வருந்தின?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## தாய்மொழி

| | | | | |
|---|---|---|---|---|
| பள்ளிக்கு | மொழி | நாம் | இனிய | பேசிடுவோம் |

எங்கள் தாய் ____________________ தமிழாகும் - அது

என்றும் ____________________ மொழியாகும்

தாய் மொழியை ____________________ படிப்போம்

தமிழ்ப் ____________________ச் சென்றிடுவோம்

தமிழை வீட்டில் ____________________

தமிழராக நாம் வாழ்ந்திடுவோம்.

புள்ளிகள் 10

**5) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அம்மொழிகளில் தமிழும் ஒன்று. அது தமிழரின் தாய்மொழி. தமிழீழமும் தமிழகமும் தமிழரின் தாய் நிலங்கள். தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தமிழ் மொழியைப் பேசுகின்றனர். தமிழ்ப் பண்பாட்டைப் பேணுகின்றனர்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

## 6) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக?

ஆண்பால் :- ______________________

பலர்பால் :- ______________________

பலவின்பால் :- ______________________

2. அம்மா உணவு சமைத்தார். இச் சொல்லியத்தில் வந்துள்ள எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்பவற்றைத் தருக.

எழுவாய் :- ______________________

செயப்படுபொருள் :- ______________________

பயனிலை :- ______________________

3. கீழ்வரும் சொற்களின் அறுவகைப் பெயர்களையும் இனங்கண்டு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| கை | ______________ | கோடை | ______________ |
| இருக்கை | ______________ | சதுரம் | ______________ |
| பள்ளி | ______________ | பாடுதல் | ______________ |

4. 'ஆடு' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியம் எழுதுக.

பெயர் : ______________________________

வினை : ______________________________

5. பின்வரும் சொற்களில் திணை, பால், இடம் என்பவற்றைத் தருக.

| | திணை | பால் | இடம் |
|---|---|---|---|
| வந்தான் | __________ | __________ | __________ |
| ஓடியது | __________ | __________ | __________ |

புள்ளிகள் 15

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ★ மாமன்னன் எல்லாளன்
- ★ மூடஆமை என்ற பாடற் பகுதியை உமது உரை நடையில் எழுதுக.
- ★ உமது தமிழ்ப் பள்ளி ஆண்டுவிழா

புள்ளிகள் 20